திரு. வி. பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்த ஓடக்காட்டுப் புதூர் மலை வாழ் மக்களுக்காகக் கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய செங்கல் கம்பி, சிமிண்ட் இவற்றையெல்லாம் கொண்டு செல்வதற்கு வண்டிப்பாதை அங்கே இல்லாமல் இருக்கிறது. எனவே முதலிலே அங்கே வண்டிப் பாதை அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதுபற்றிப் பிரச்சினை இப்பொழுது இல்லை எப்படியும் கட்டடம் கட்டி முடிக்கப்படும்

குன்னூர் அரிசன நலப் பள்ளிக்கட்டடம்

* 241 வினா—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், குன்னூரில் 26—3—1972-ம் நாளன்று அரிசன நலப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதில் யார் யார் கலந்து கொண்டார்கள்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அவ்விழாவில் மத்திய அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம், மதுரை மாவட்ட ஆட்சியாளர், மதுரை மாவட்ட நல அதிகாரி, ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தலைவர், ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

வைகை அணைப் பகுதியில் மிருகக்காட்சி சாலை

* 246 வினா—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வைகை அணைப் பகுதியில் மிருகக் காட்சிசாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

1973 மார்ச் 5]

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இந்த வைகை அணைக் கட்டுப் பகுதிக்குப் பல்லாயிரக்கணக்கானவர்கள் யாத்திரிகர்கள் வந்து பார்த்துவிட்டு அதன் பெருமையையும் அழகையும் சிறப்பையும் பற்றிப் பேசிச் செல்கிறார்களே, அப்படிப்பட்ட இடத்திலே தமிழகத்திலே இருந்து வரும் அனைவரும் கண்டு களிக்கக் கூடிய வகையில் இனியாவது அங்கே ஒரு மிருகக் காட்சி சாலை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பொதுப்பணித் துறையின் மூலம் சில குறிப்பிட்ட மிருகங்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. வனத்துறையின் மூலமாக அங்கே மிருகக் காட்சி சாலை வைப்பதற்கு யோசனை இல்லை.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோனையா அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, தமிழகத்தின் தென் பகுதியில் சிறப்பாக அமைந்திருக்கின்ற வைகை அணைக்கட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள், வருஷ நாடு போன்ற பகுதிகளிலிருந்தெல்லாம் வருகின்ற மக்கள் மிருகக் காட்சி சாலையைக் கண்டு களிக்கின்ற வாய்ப்பு ஏற்படுமே. அந்த வசதியைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுவது ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இப்பொழுது மாநிலத்திலே இருக்கின்ற ஒரேயொரு மிருகக்காட்சி சாலை சென்னையிலே இருக்கிறது. அதைச் சென்னைக்கு அருகில் எங்கேயாவது மாற்ற வேண்டுமென்ற ஆலோசனை நடந்துகொண்டு இருக்கிறது. அது முடிந்தபிறகு பிறிதொரு மிருகக்காட்சி சாலையைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, இந்த வைகை அணைப் பகுதியில் காட்டிலாக்காவின் சார்பில் நல்ல பறவைகளைப் பதனப்படுத்தி அழகான காட்சியாக அமைக்கப் பட்டிருக்கிறது. அதை ஏராளமான மக்கள் பார்க்கிறார்களா என்பது ஐயப்பாடாக இருக்கிறது. அது தலைநகரத்தில் அமைக்கப் பட்டால் ஏராளமானவர்கள் பார்த்து மகிழ முடியும். ஆகவே, அண்ணா சமாதிக்குப் பக்கத்தில் அம்மாதிரியான காட்சியைப்

அமைக்க உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே. தென் மாவட்டங்களிலே, ஒரு வனப்பயிற்சிப் பள்ளி இருக்கிறது. அந்தப் பயிற்சியாளர்களுக்குப் பொருள்கள் தேவைப்படுவதால் அதை யொட்டி ஒரு சிறிய பொருட்காட்சி சாலை வைக்கப் பட்டிருக்கிறது. அணையைப் பார்க்க வருகின்றவர்கள் எந்தக் கட்டணமும் இல்லாமல் அதைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப் படுகிறார்கள். பிறிதொரு பொருட்காட்சியைப்பற்றி இப்பொழுது குறிப்புகள் இல்லை.

திரு. த. சோலையா : தலைவரவர்களே, அந்த வைகை அணைக் கட்டில் பெரிய மிருகக் காட்சி சாலையை வைக்காவிட்டாலும், ஒரு சில மிருகங்களைக் கொண்டு, சிறிய சிறிய மிருகங்கள் இருக் கின்றன, அதையெல்லாம் வைத்து சிறிய மிருகக்காட்சி சாலை யாவது அமைப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, சிறிய மிருகக்காட்சி சாலை என்றால் என்னென்ன என்பதற்குப் பட்டியல் தரட்டும். அதற்குப் பிறகு யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சிறிய மிருகக்காட்சி சாலை என்றால் சிறிய சிங்கம், சிறிய புலியைக் கொண்டா அமைப்பது ?

Madras-Tirupathy buses

* 247 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to introduce smaller buses in Madras-Tirupathy route; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS